

சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் வடக்குப் பகுதி, 35 வது வட்டம், மாவட்டப் பிரதிநிதி ஐ.சையது அலிகான் ஏற்பாட்டில் கொடுங்கையூர், முத்தமிழ் நகர், 2 வது பிளாக்கில் வசிக்கும் சுமையாவிற்கு சிறு தொழில் செய்வதற்காக 20,000 ரூபாயை மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. வழங்கினார். இதில் பெரம்பூர் வடக்கு பகுதிச் செயலாளர் அ.முருகன், மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.ஆர்.கமலக்கண்ணன், வட்டச் செயலாளர் எம்.உமாபதி, அப்துல்லா, ஆசிரியர் அய்யனார், ஆட்டோ இக்பால், நசீர், சாதிக், ஜாகிர் உசேன், சரவணன், ஆசிப், சபீர் அசிஸ் வாகிதா, யாஸ்மின், ஆயிஷா, கவிதா மற்றும் கழகத் தோழர்கள் பலர் உடன் உள்ளனர்.

### ஒன்றியச் செயலாளர் சே.பிரேம் ஆனந்த் ஏற்பாட்டில்

# திருவள்ளூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ, சிறப்புரை! ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவள்ளூர், ஆக. 28

திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவள்ளூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய செயலாளர் சே. பிரேம் ஆனந்த் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு ஒன்றிய துணை செயலாளர் ஞா.ரமேஷ் தலைமை தாங்கினார். நிர்வாகிகள் மு. ராஜா, ப. மகேஸ்வரி பால விநாயகம், எ.குட்டி (எ) பக்தவச்சலு, ஆர் திலீப்ராஜ், ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு. நாசர் எம்எல்ஏ, கலந்து கொண்டு சிறப்புரையற்றினார் அவர் பேசும்போது, 2024 நாடாளுமன்றத் தேர்தலில் திமுக கூட்டணி கட்சியின் வேட்பாளர் ஆதரித்து இரவும் பகலும் பாராமல் பணியாற்றிய அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்த கழக நிர்வாகிகளுக்கு அனைவருக்கும் நன்றி கூட்டத்தின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்

பேரறிஞர் அண்ணா வழியில் தலைவர் கலைஞர் கட்டிக்காத்த தி.மு.க.வின் பவளவிழா ஆண்டு நிறைவினை, கழகம் தொடங்கப்பட்ட நாளான செப்டம்பர் 17 அன்று கொண்டாடப்படுகிறது இந்நிலையில் சென்னையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் கழக நிர்வாகிகள் அனைவரும் பெருதிரளா கலந்து கொள்ள வேண்டும்

(75 ஆண்டு) கால அரசியல் வரலாற்றில் தி.மு.கழகம் படைத்த சாதனைகள் கழக ஆட்சியில் நிறைவேற்ற ப்பட்ட மகத்தான திட்டங்கள் திராவிட மாடல் அரசைத் திறம்பட நடத்திவரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மக்கள்நலத் திட்டங்கள் ஆகியவற்றை விளக்கிச் சுவர் விளம்பரங்கள் எழுதப்பட்டு தெருமுனைக் கூட்டங்களை நடத்தி, மக்களிடம் தி.மு.க.வின் சாதனைகளை எடுத்துக் கூற வேண்டும்

கழகக் கொடிக் கம்பங்கள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டு, அதில் அந்தந்தப் பகுதியில் கழகத்திற்காக அல்லும் பகலும் உழைத்த மூத்த முன்னோடிகளின் கரங்களால் நம் இருவண்ணக் கொடியை ஏற்ற வேண்டும். அனைத்து பூத் கமிட்டிகளையும் (BLA2. BLC) உடனடியாக செம்மைப்படுத்த வேண்டும். முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் மற்றும் தமிழ்நாட்டு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்க ளின் சாதனைகளை எடுத்துக் கூறி இல்லம் தோறும் இளைஞர் அணி சார்பில் உறுப்பினர் சேர்க்கை நடத்திட வேண்டும்.

2026 சட்ட மன்ற மன்ற தேர்தல் வரும் இருப்பதால் அதற்கான பணிகளை மும்முரமாக ஈடுபட வேண்டும் நீங்கள் உழைப்பு உழைப்பு என்ற தாரக மந்திரத்தில் ஏற்றி உழைத்தால் பதவி உயர்வு நிச்சயம். சாதாரண செயற்குழு உறுப்பினராக இருந்த நமது தலைவர் மு.க. ஸ்டாலின் தற்பொழுது உயர்ந்த பதவியை தனது உழைப்பின் காரணமாக அடைந்துள்ளார். தொண்டர்கள் உழைப்பை மூலதனமாக கொடுத்தால் வட்டச் செயலாளர் நகரச் செயலாளர் உள்ளிட்ட பதவிகளை விரைவில் அடையலாம்.என பேசினார்.

இந்த கூட்டத்தில் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., மாவட்ட நிர்வாகிகள் கே. ஜெ.ரமேஷ், ம.ராஜி, காயத்ரி ஸ்ரீதரன், பா.நரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி. விமல் வர்ஷன், வி.குமார், காஞ்சனா சுதாகர், மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் நிர்வாகிகள் சன் பிரகாஷ், த.தங்கம் முரளி, ஜி.நாராயண பிரசாத், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கே.சுரேஷ் குமார், வி. தியாகராஜன், பெ. வினோத், திருவள்ளூர் ஒன்றிய குழு துணை தலைவர் எம்.பர்க்கத்துல்லா கான், ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி. கருணாநிதி, பிரியாகுமார், பி. ராமானுஜம், பாக்கம் கு.கருணாகரன், ஏ. ஆல்பர்ட் (எ) அன்பு, வி.ஹரி, வி.உதயகுமார், பி.சரவணன், மோத்திஸ் ஜித்து, தெய்வசிகாமணி, தாஸ்(எ) நாராயண சாமி, கே.எட்வின். எஸ். சதீஷ் குமார், கதிரவன், கஜலட்சுமி, ஆர். ராஜீ, சங்கீதா ராஜ், வேதவல்லி சதீஷ்குமார், ராஜேஸ்வரி சேகர், டெய்சி ராணி ஆல்பர்ட், ஜெரு ஜோன்ஸ் பிரியதர்ஷினி ஸ்ரீதர், டி. சீனிவாசன், இ.சீனிவாசன், தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் மணிகண்டன், செல்வி ஜீவா, பா.ஆதவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முடிவில் மாவட்ட பிரதிநிதி இ என் சேகர் நன்றி உரையாற்றினார்.

### சென்னை – புரசைவாக்கம் – கங்காதரேசுவர் திருக்கோயிலில்

# ரூ.3.86 கோடி மதிப்பீட்டில் நடைபெறும் திருப்பணிகள்!

## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு செய்தார்!

சென்னை, ஆக.28-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (27.08.2024) சென்னை, புரசைவாக்கம், கங்காதரேசுவர் திருக்கோயிலில் ரூ.3.86 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் திருப்பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

பின்னர், அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், 39 மாத கால நிறைவில் திருக்கோயில் திருப்பணிகளுக்கு அதிக முக்கியத்துவம் தந்து அவற்றை தொடர்ந்து ஆய்வு செய்து பக்தர்களுடைய தேவைகளை நிறைவேற்றி வருகின்றோம். அந்த வகையில் புரசைவாக்கம், கங்காதரேசுவர் திருக்கோயிலில் ரூ.81 லட்சம் மதிப்பீட்டில் செய்யப்பட்டு வரும் மரத்தேர் உட்பட ரூ.3.86 கோடி மதிப்பீட்டில் 29 பணிகள் நடைபெற்று வருகின்றன. சட்டமன்ற அறிவிப்பின்படி இத்திருக்கோயிலுக்கு ரூ.6 கோடி மதிப்பீட்டில் தங்கத்தேர் செய்வதற்கு ரூ.31 லட்சம் செலவில் மரத்தேர் செய்யும் பணி நிறைவு பெற்று ள்ளது. இத்திருக்கோயிலுக்கு 01.02.2023 அன்று பாலாலயம் செய்யப்பட்டு திருப்பணிகள் தொடங்கப்பட்டன. இதுவரை 90 சதவீத பணிகள் நிறைவுபெற்றுள்ள நிலையில் விரைவில் குடமுழுக்கு நடத்தப்படும்.

இந்த அரசு பொறுப்பேற்றபின் இதுவரை 1,983 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நிறைவு பெற்றிருக்கின்றது. வருகின்ற 28 ஆம் தேதி 11 திருக்கோயில்களுக்கும், 30 ஆம் தேதி 9 திருக்கோயில்களுக்கும் குடமுழுக்குகள் நடைபெற உள்ளது. இந்த மாத இறுதிக்குள் 2003 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நிறைவு பெற்றிருக்கும். 2,000 மாவது திருக்கோயில் குடமுழுக்கில் துறையின் அமைச்சர் என்ற முறையில் பங்கேற்கவுள்ளேன். கடந்த 39 மாத காலங்களில் 2,000 குடமுழுக்குகளை நடத்தியது பெரிய சாதனையாகும். அதேபோல திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.6,770 கோடி மதிப்பிலான 6,850 ஏக்கர் நிலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளதோடு, 1,71,730 ஏக்கர் திருக்கோயில் நிலங்கள் அளவீடு செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன.

முனியில் நடைபெற்ற முத்தமிழ் முருகன் மாநாட்டை அரசியலுக்காக புதிதாக கையில் எடுத்ததாக ஒரு சிலர் கூறி வருகின்றனர். இந்த ஆட்சி ஏற்பட்டதிலிருந்து எண்ணற்ற திருப்பணிகளை முருகன் திருக்கோயில்களில் மேற்கொண்டு வருகிறோம். குறிப்பாக, தமிழ்க் கடவுள் என போற்றப்படும் முருக பெருமான் அமைந்துள்ள 72 திருக்கோயில்களுக்கு இதுவரை குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. 831 முருகன் திருக்கோயில்களில் 1,067 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. அதில் குறிப்பாக, பெருந்திட்ட வரைவின் கீழ் 7 முருகன் திருக்கோயில்களில் ரூ. 859.82 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. திருச்செந்தூர் திருக்கோயிலில் ரூ.300 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பணிகள் அடுத்தாண்டு இறுதிக்குள் முடிக்கப்பட்டு குடமுழுக்கு நடத்தப்படும். மூத்த குடிமக்கள் பயன்பெறும் வகையில் அறுபடைவீடு ஆன்மிகப் பயணம் தொடங்கப்பட்டு இதுவரை 4 கட்டங்களாக 813 நபர்கள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இதற்காக அரசு ரூ.1.58 கோடியை மானியமாக வழங்கியுள்ளது. இப்படி எண்ணற்ற பணிகளை தொடர்ந்து எவ்வித தவறுக்கும் இடம்கொடாமல் நேர்த்தியோடு செய்து வரும் அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசாகும்.

எந்த ஒரு நற்காரியத்தை செய்தாலும், மாற்றுக் கருத்துகள் வரும் போதுதான் அந்த செயல் இன்னும் உறுதிப்படும். அந்த வகையில் பழனி முத்தமிழ் முருகன் மாநாட்டில் இயற்றப்பட்ட தீர்மானத்தின்படி இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில் நிர்வாகத்திற்குட்பட்ட பள்ளிகள், கல்லூரிகள் தான் சமயம் சார்ந்த வகுப்புகளை தொடங்குவதாகவும், முருகன் சம்பந்தப்பட்ட இலக்கியங்களில் முருகருடைய இலக்கிய புகழை அறிந்து கொள்வதற்காக அது சம்பந்தமான போட்டிகளை நடத்தி அதில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசளிப்பு நிகழ்த்தப்படும் என்று கூறியிருக்கின்றோம். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு திருக்கோயில்கள் சார்பில் 10 கல்லூரிகள் தொடங்கப்படும் என அறிவித்து 4 கல்லூரிகள் தொடங்கப்பட்ட நிலையில் அவற்றிற்கு தடை இல்லை நீதிமன்றம் அறிவித்ததோடு, அதில் சமயம் சார்ந்த வகுப்புகளை தொடங்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது. அதற்கு ஏற்ப சைவ சித்தாந்த வகுப்புகள் கல்லூரிகளில் தொடங்கப்பட்டுள்ளன. அதுபோல தான் திருக்கோயில்களின் நிதியிலிருந்து நடத்தப்படும் கல்லூரிகளில் அங்கு பயிலும் விருப்பமுள்ள மாணவர்களுக்கு சமயம் சார்ந்த பயிற்சி வகுப்புகளை நடத்துவது என திட்டமிட்டிருக்கிறோம். இதுகுறித்து கருத்து தெரிவித்திருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில தலைவர் மூத்த தலைவர் பாலகிருஷ்ணன் அவர்களிடத்திலும், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ரவிக்குமார் அவர்களிடத்திலும் முத்தமிழ் முருகன் மாநாடு குறித்தும், அதன் தீர்மானங்கள் குறித்தும் விளக்கம் அளித்திருக்கிறோம்.

பழனியில் நடைபெற்ற முத்தமிழ் முருகன் மாநாட்டில் அமைச்சர் பெருமக்கள், உயர்நீதிமன்ற நீதியரசர்கள், தவத்திரு ஆதீன பெருமக்கள், ஓய்வு பெற்ற நீதியரசர்கள், பிற மாநிலங்கள் மற்றும் வெளி நாடுகளிலிருந்து முக்கிய பிரமுகர்கள், அரசு உயர் அலுவலர்கள் குறிப்பாக இனம், மொழி, மதத்திற்கு அப்பாற்பட்டு கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் கூட பங்கேற்று சிறப்பித்தனர். இம்மாநாடு வரலாற்றில் ஒரு மைல் கல்லாக திகழும். இந்த மாநாட்டை பத்திரிகை மற்றும் ஊடகங்கள் பெரிய அளவில் முக்கியத்துவம் தந்து உலகளவில் கொண்டு சேர்த்தமைக்காக துறையின் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

அன்பிற்கினிய சகோதரி நமீதா அவர்கள் நேற்றைய தினம் மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலில் நடைபெற்ற சம்பவம் குறித்தும் என்னையும் அதில் இணைத்தும் பதிவிட்டிருந்தார். ஏற்கனவே பழநி திருக்கோயிலில் இதுபோன்ற பிரச்சனை தொடர்பான வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் அவர் இஸ்லாமியராக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தால் அந்த சம்பவம் நேற்றைய தினம் நடைபெற்றுள்ளது. இது குறித்து விசாரணை செய்வதற்கு ஆணையர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். சகோதரி நமீதா அவர்கள்மனதுபுண்படும்படியாகவோ அல்லது விரும்ப தகாத அளவிற்கு சட்டத்திற்கு புறம்பாக ஏதாவது நடந்திருந்தாலோ அது குறித்து விசாரித்து நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும். அவர் வருத்தப்பட வேண்டாம். அப்படி அவர் பெரிய அளவிற்கு வருத்தப்படுவதாக இருந்தால் எங்களுடைய வருத்தத்தையும் பதிவு செய்து கொள்கிறோம்.

முதலமைச்சர் அவர்கள் இந்துக்கள் மற்றும் சிறுபான்மையினரை இரண்டு கண்களாக, கரங்களாக பார்ப்பவர். சிறுபான்மையினர் அழைக்கின்ற போதெல்லாம் அவர்களின் மாநாடாக இருந்தாலும், விழாக்களாக இருந்தாலும் கலந்து கொள்கின்றார். அதேபோல் தான் முத்தமிழ் முருகன் மாநாட்டினை காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். அதனை ஆன்மிக பெருமக்கள் மகிழ்ச்சியோடு வரவேற்றுள்ளனர். முதலமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் எல்லாம் என்ற நிலையிலேயே தொடர்ந்து செயல்பட்டு வருகின்றார்.

அன்னைத் தமிழில் அர்ச்சனை என்ற திட்டத்தை செயல்படுத்தியதோடு, 14 போற்றி புத்தகங்களையும் தமிழில் வெளியிட்டு தமிழில் குடமுழுக்கு நடத்தும் திட்டத்தையும் செயல்படுத்தி வருகின்றோம். அந்த வகையில் பழனி திருக்கோயில் குடமுழுக்கு அன்னைத் தமிழில் நடத்தப்பட்டது. இது தொடரும். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என செயல்பட்டு வரும் திராவிட மாடல் அரசு அன்னைத் தமிழில் குடமுழுக்கையும் அழுத்தம் தந்து செயல்படுத்தும்.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், இணை ஆணையர் திருமதி ஐ.முல்லை, அறங்காவலர் குழுத் தலைவர் டாக்டர் பெ.வெற்றிக்குமார் மற்றும் அறங்காவலர்கள், உதவி கோட்டப் பொறியாளர் திருமதி விஜயா, செயல் அலுவலர் சா. இராமராஜா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


